**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை – 2017**

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

நியமத்தின் 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் துணைக் கம்பனிகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களும் விரிவாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், சபை அதன் துணைக் கம்பனிகளான டிவலப்மென்ட் ஹோல்டின் தனியார் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 617,818 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்கில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை மற்றும் டிவலப்மென்ட் ஹோல்டின் தனியார் கம்பனியுடன் கைச்சாத்திட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாகச் செலுத்த வேண்டிய ரூபா 5,937,500 தொகையான வாடகை மற்றும் வாகன நிறுத்தி வைத்தல் வாடகையான ரூபா 120,108 என்பன கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திஸ்ஸமஹாறாம ஏற்றுமதி உற்பத்திக் கிராம கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 2,493,310 தொகையான கடன் பணத்திற்காக அறவிடவேண்டிய ரூபா 2,793,599 தொகையான வட்டி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் தனியார் கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 3,000,000 ஆக இருந்த போதிலும், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சுச் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட தலைவரின் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதிய ஈடீபீ/ஆர்டீடீ/ஆர்1/எம்ஜஎஸ்/022 ஆம் இலக்க கடிதத்தில் பதிவழிப்பதற்கு கோரப்பட்ட கடிதத்தின் பிரகாரம் முதலீட்டுத் தொகை ரூபா 2,948,731 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் தனியார் கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்ட முதலீடாக பேரேட்டில் ரூபா 598,457 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், முதலீடு குறைத்து ஒதுக்கப் பதிவேட்டில் அது ரூபா 3,598,457 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 3,000,000 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

இரத்மலானை களஞ்சியத்திற்குரிய ரூபா 877,303 பெறுமதியுடைய வாடகை உடன்படிக்கை மற்றும் மதிப்பீட்டு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தி | ஒரு காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் வரிசை அமைச்சிற்கும், பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.2.5 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்று அடுத்து வரும் ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 தினங்களுக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச்சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | சாதாரண நடைமுறைகளுக்குப் புறம்பாக மிகையூதியப்படி செலுத்துவதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்காக கம்பனி தொடர்பாக புறம்பாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,560,467 தொகையான மிகையூதியப் படிக்காக அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரப்பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் தனது பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற நவம் மாவத்தையில் 05 மாடிகளுடைய கட்டிடத்திற்காக 2016 மார்ச் 15 ஆந் திகதி முதல் 2017 மார்ச் 14 ஆந் திகதி வரை தனியார் கம்பனியொன்றுடன் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2017 மார்ச் 15 முதல் 2017 ஒக்தோபர் 26 வரை உடன்படிக்கையின்றி ரூபா 37,150,685 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 20,282,474 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 45,773,906 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 66,056,380 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மானியம் ரூபா 11,806,660 இனால் குறைவடைந்ததுடன் நிர்வாகச் செலவினம் ரூபா 34,209,711 இனாலும், ஏற்றுமதி அபிவிருத்திச் செலவினம் ரூபா 19,343,743 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் வீழ்ச்சிக்காக பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக தேறிய இலாபம் ஏற்பட்டிருந்ததுடன், அது வருடாந்தம் தளம்பலடைந்து மீளாய்வாண்டின் போது தேறிய நட்டத்தைப் பெற்றிருந்தது. எனினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கும் போது, 2013 ஆம் ஆண்டில் ரூபா 287,157,318 தொகையான பங்களிப்பு அதன் பின்னைய ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பங்களிப்பு ரூபா 197,541,947 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு செயற்பாடுகளும் ஆரம்பிப்பதற்கும், முடிவடைவதற்கும் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி என்பவற்றைக் குறிப்பிட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பௌதீக அளவுகளைக் காண்பித்து செயலாற்றல் அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் சபையின் செயல்முன்னேற்றத்தை ஒப்பீட்டு ரீதியில் பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம், உரிய ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு என்பவற்றை உள்ளடக்கிய மனித வள அபிவிருத்தித்திட்டம் சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 12 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு பூரணப்படுத்தப்படாமையினால் ரூபா 12,460,000 தொகை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஈ) பாதீட்டில் குறிப்பிடப்பட்ட 10 செயற்பாடுகளுக்காக ரூபா 24,400,000 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அதனை விஞ்சி ரூபா 13,900,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(உ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த Participation at ICA Congress - 2017 மற்றும் Co- organaized Jewels Talk conference என்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 900,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அமுல்படுத்தப்படாதிருந்த ரூபா 8,900,000 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்ட 11 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படாத ரூபா 7,300,000 தொகை ஒதுக்கப்பட்ட 09 நிகழ்ச்சித்திட்டங்கள் அடுத்து வரும் வருடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக செயலாற்றல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீன் உற்பத்தி தொடர்பாக சர்வதேச வாடிக்கையாளர்களை கண்டறியும் நோக்கில் 2017 ஏப்ரல் 25 முதல் 27 வரை பெல்ஜியம் இல் நடாத்தப்பட்ட SEAFOOD EXPO GLOBAL சந்தைக் கண்காட்சிக்காக விண்ணப்பிக்குமாறு கோரி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை சபையினால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கி நிதி அனுசரணை குறிப்பிடப்படாமையினால் கண்காட்சிக்கு விண்ணப்பிக்கும் ஏற்றுமதியாளர்களின் ஆர்வம் குறைவடைந்திருந்தது. மேலும் சபையினால் ஒரு சந்தைக் கண்காட்சிக்காக ஒரு கம்பனிக்கு 03 சந்தர்ப்பங்கிளன் போது மாத்திரம் அனுசரணை வழங்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது இந்த கண்காட்சிக்கு பங்குபற்றிய 03 ஏற்றுமதிக் கம்பனிக்கு அதற்கு முன்னர் 05 சந்தர்ப்பங்களிலும், மேலும் 02 ஏற்றுமதி கம்பனிகளுக்கு 04 சந்தர்ப்பங்களிலும் நிதி அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. இந்த கண்காட்சிக்கு பங்குபற்றி நிதி அனுசரணை பெற்றிருந்த ஒரு கம்பனி 2015 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதி செய்யாதிருந்ததுடன் சந்தைக் கணக்காட்சியின் பின்னரும் ஏற்றுமதிகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) சர்வதேச சந்தையில் இலங்கையின் இறப்பர் சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு 2017 சனவரி 19 ஆந் திகதி முதல் 21 ஆந் திகதி வரையான காலத்தில் இந்தியாவில் நடைபெற்ற INDIA RUBBER EXPO சந்தைக் கண்காட்சிக்கு ஏற்றுமதியாளர்களைத் தெரிவு செய்யும் போது அதிக ஏற்றுமதி வருமானத்தை உழைக்கின்ற நிதிக் கஷ்டங்களின்றிய கம்பனிகளுக்காக அதிக புள்ளியும், குறைந்த ஏற்றுமதி வருமானத்தை உழைக்கும் கம்பனிகளுக்காக குறைந்த புள்ளியும் வழங்கி ஏற்றுமதி மேம்படுத்தலுக்காக நிதி உதவி வழங்குதல் மேற்கொள்ளப்பட்டமையால் நிதிக்கஷ்டங்கள் காணப்படுகின்ற ஏற்றுமதியாளர்களை கட்டியெழுப்புவதல் மற்றும் ஊக்குவிப்பு பணிகள் என்பன உரிய முறையில் மேற்கொண்டிருக்கவில்லை. இந்தக் கண்காட்சிக்கு பங்குபற்றிய 06 ஏற்றுமதியாளர்களில் 03 ஏற்றுமதியாளர்களும் ஒரு தொகுதிக்குரிய ஏற்றுமதியாளர்களாக இருந்ததுடன் அந்த தொகுதிக்காக சபையினால் ரூபா 527,100 தொகையான நிதி அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. இதனால் ஏனைய ஏற்றுமதியாளர்களுக்கு உள்ள சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் 35 தனியார் கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 58,312,484 தொகை மற்றும் 29 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 105,066,208 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த முதலீடுகளிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 17,315,000 தொகை முதலீடு செய்யப்பட்ட 03 கம்பனிகள் 2002, 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கலைக்கப்பட்டிருந்ததுடன் கலைப்பாளரால் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட பணத்தை மீளச் செலுத்துவதற்கு சொத்துக்கள் இல்லாதிருந்ததாக காண்பிக்கப்படுகின்றது. மேலும், கம்பனிப்பதிவு பெயர் பதிவேட்டில் பதிவழிக்கப்பட்ட 25 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 46,323,648 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. சபையினால் முதலீடுகளை காலரீதியில் மீளாய்வு செய்து ஏற்படக்கூடிய மூலதன நட்டத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாய ஏற்றுமதி வலயத்தில் 50 விவசாய ஏற்றுமதி முன்னுரிமை செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 500 மில்லியன் செயற்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை வீரவிலயில் 18 ஏக்கர் காணிப் பிரதேசத்தில் மரக்கறி மற்றும் பழவகைகளை பயிரிடுவதற்காக தனியார் கம்பனியொன்றுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட விவசாய செயற்திட்டம் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) கம்பனிக்கு 1998 சனவரி 01 ஆந் திகதி முதல் 2002 திசெம்பர் 24 ஆந் திகதி வரை சபையினால் ரூபா 2,493,310 தொகையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை வரையிலும், அந்தத் தொகை மற்றும் அதற்குரிய வட்டி என்பன அறவிடப்படாதிருந்ததுடன், சபையினதும் அக்கம்பனியினதும் நிதிக்கூற்றுக்களில் அது பெறவேண்டிய / செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 நவம்பர் 27 ஆந் திகதி இருதரப்பினருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 8,000,000 ஆக இருந்ததுடன், 10 வருடங்களில் 03 கட்டங்களின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், முதலாவது கட்டத்திற்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 3,857,360 தொகை திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளருக்கு 2009 நவம்பர் 26 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியினால் அதில் ரூபா 2,043,890 தொகை 09 மாத காலம் செலவிடப்படாமல் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கம் விவசாய ஏற்றுமதி வலயத்தில் கருவா, இஞ்சி மற்றும் வெனிலா போன்ற சிறு ஏற்றுமதி பயிர்களை உயர்தரத்தின் கீழ் அபிவிருத்தி செய்து ஏற்றுமதி வியாபாரத்திற்குத் தொடர்புபடுத்துவதற்காக இருந்த போதிலும், நோக்கங்களுக்கு முரணாக ரூபா 1,400,000 செலவில் 2,000 மாங்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு 15 ஏக்கர்களில் 500 மாங்கன்றுகள் மாத்திரம் பயிரிடப்பட்டு எஞ்சிய 1,500 மாங்கன்றுகளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. மேலும், 52,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 1,000 வாழைக் கன்றுகளும் வறட்சியினால் அழிவடைந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) ஏற்றுமதி முன்னுரிமை விவசாய செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்திலிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உழைக்கப்பட்ட ரூபா 7,793,864 தொகையான மொத்த வருமானத்தில் ஏற்றுமதி வருமானம் ரூபா 2,338,160 மாத்திரமாக இருந்தது. மேலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஏற்றுமதிகள் இடம்பெறாமையின் அடிப்படையில், மாங்கன்றுகள் பெற்ற நலனாளிகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்கள் பெற்றுக்கொள்வதற்கு சபை உதவி வழங்காமையினால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(v) இந்த விவசாய ஏற்றுமதி வலயத்தில் மாகாண மட்டத்தில் விவசாய உற்பத்திகளை சேகரித்தல் மற்றும் அவற்றை ஏற்றுமதி மட்டத்திற்கு முன்னேற்றும் நோக்கில் தயாரித்தல் மற்றும் பொதியிடல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கும் அதற்குத் தேவையான தளபாடப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் ரூபா 24,120,000 தொகை சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2015 யூலை 28 ஆந் திகதி வரையில் ரூபா 18,590,296 தொகை செலவில் நிர்மாணங்கள் இடம்பெற்றிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு வரையிலும் அந்த நிலையத்தில் எந்தவொரு பொதியிடலோ அல்லது தயாரித்தல் நடவடிக்கைகளோ இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பரவலடையும் ஏற்றுமதி சந்தை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பங்குபற்றலைக் காண்பிக்கும் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டத்திற்குரிய விண்ணப்பங்களின் மதிப்பீடு 05 பேர்களையுடைய மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 05 சந்தர்ப்பங்களின் போது அங்கீகரிக்கப்பட்ட அளவை விட குறைவான அங்கத்தவர் தரப்பொன்று மதிப்பீட்டு நடவடிக்கைகளைச் செய்திருந்தது.

(ii) வழிகாட்டியின் பிரகாரம் விண்ணப்பதாரர்களால் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கு முன்னர் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் சபையின் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையினால் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய ஏற்றுமதியாளர்களின் செலவினங்கள் மீளளிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனை அல்லது அடையப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றம் தொடர்பாக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் செயல்முன்னேற்ற மதிப்பீடு சரியான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 03 கண்காட்சிகளுக்காக உரிய ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையினை விட கூட்டுமொத்தமாக ரூபா 2,676,342 மேலதிகமாக அறிவிடப்பட்டிருந்ததுடன் அந்த பணம் தொடர்பாக செயற்படுகின்ற முறை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை.

## 4.4 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபையின் உதவிப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் என வரிசை அமைச்சிற்கு முறையே 2017 மார்ச் 13 மற்றும் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதிகளில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளுக்காக ரூபா 817,898 தொகை 2017 திசெம்பர் 31 வரையில் சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரிய டபள்கெப் வண்டி 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 22 ஆந் திகதி வரை வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதிக்காக சபையினால் ரூபா 128,515 தொகையொன்று பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக்காக செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 282 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 249 ஆனமையால் 36 பதவிகளில் வெற்றிடங்களும் 03 பதவிகள் மேலதிகமாகவும் காணப்பட்டன. இந்த வெற்றிடங்களால் சபையின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உரிய பதவிகளை இனங்கண்டு அந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்திருக்கும் வகையில் சபையினால் தமது விடயப்பரப்பிற்கு இணங்க அடைய வேண்டிய நோக்கமான நிலைபேறான அபிவிருத்தி நோக்க அதிகாரத்தைக் கையளித்தல், ஆண், பெண் சமத்துவத்தை அடைதல், நிலைபேறானகைத் தொழில் மயமாக்கல் மற்றும் புதியவைகளுக்காக ஊக்குவிப்பை வழங்குதல் என்பன இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதன் விடயப்பரப்பிற்கு கொண்டுவரப்படும் ஏனைய நோக்கமான நிலைபேறான நிதிசார் அபிவிருத்திக்கான பூகோள தொடர்பை வலுப்படுத்தும் செயற்பாட்டினை மேலோங்கச் செய்யும் நோக்கத்தில் அடங்கிய (17 ஆவது நோக்கம்) ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு வியாபாரத்தை கட்டியெழுப்பும் இலக்கை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதற்காக தொடர்புபடுகின்ற இலக்கு, அடிப்படைத் தரவுகள், இலக்கை அடையக்கூடிய கட்டங்கள், அதன் செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபையின் வருடாந்த திட்டத்தில் அந்த பணிகளை உள்ளடக்கி தேவையான நிதிஏற்பாடுகளும் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 05 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 15 அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதில் 02 அறிக்கைகளுக்காக முகாமைத்துவத்தால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஏற்றுமதி மேம்படுத்தல் உத்தியோகத்தராக சேர்க்கப்பட்ட ஒரு பெண் உத்தியோகத்தர் 2017 சனவரி 02 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார்.

## 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.19(ஆ) பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கை, பிரதான பெறுகைத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டு காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2(ஆ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகைச் செயற்பாடுகளினதும் ஆரம்ப சந்தர்ப்பம் முதல் இறுதிவரையிலும் படிமுறையாகவும் ஒழுங்குமுறையாகவும் விபரங்களைப் பெற்று பெறுகை கால அட்டவணையொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) Seafood Expo Global சந்தைக் கண்காட்சியில் வியாபாரக் கூடாரங்களை நிர்மாணிப்பதற்காக கூறுவிலை சமர்ப்பித்த 07 நிறுவனங்களில் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் வியாபார கொட்டகையில் வடிவமைப்பு ரீதியில் சரிந்து காணப்பட்ட குறைபாட்டை கலந்துரையாடல் மட்டத்தில் தீர்வு காண்பதற்கு முடியுமாக இருந்த போதும் அந்த விலை நிராகரிக்கப்பட்டு ஆகக்குறைந்த விலையினை விட யூரோ 10,516 தொகையான அதிக பெறுமதியில் கூறுவிலை சமர்ப்பித்த இரண்டாவது விலை சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட பாதீட்டையும் உள்ளபடியான செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 03 விடயங்களில் 47 சதவீதம் முதல் 3,400 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.4 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதும் போதியளவான கவனம் செலுத்தப்படாத கணக்காய்வுப் பந்திகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | பந்தி இலக்கம் | கணக்காய்வுப் பந்தி |
|---|---|---|
| 2016 | 2.4(ஆ) | விமானம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சகல பிரயாணங்களிலும் சிக்கன வகுப்பை பயன்படுத்த வேண்டிய போதிலும், சபையின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக வியாபார வகுப்பில் பிரயாணப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,886,350 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| | 2.4(எ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக சபையில் 25 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு தங்கப்பவுண் வழங்குவதற்காக 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 478,002 செலவிடப்பட்டிருந்த போதிலும், தமது ஊழியர்களுக்குச் நலன்களைச் செலுத்துவதற்காக திறைசேரி நிதியேற்பாட்டைப் பயன்படுத்தும் போது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | 4.6(இ)(ii) | உதவிப் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 2016 ஆகஸ்ட் 21 ஆந் திகதி நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 05 வெளிவாரி விண்ணப்பதாரர்களும் 04 உள்ளக விண்ணப்பதாரர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்தப் பரீட்சையின் ஆங்கிலப் பாடத்திற்காக வழங்கப்பட்ட காலம் போதியளவாக இல்லாததென குறிப்பிட்டு உள்ளக விண்ணப்பதாரர்கள் மேற்கொண்ட கோரிக்கையின் பிரகாரம் ஆங்கிலப் பாடத்திற்காக மாத்திரம் மீண்டும் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. |
| | 2.4(அ) | ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புப் பணத்தை கணிப்பீடு செய்யும் போது விசேட படிகள், தொழில்சார் படிகள், உள்ளகப் படிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத விசேட வாழ்க்கைச் செலவுப் படிகளை உள்ளடக்குதல் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகளை உள்ளடக்காமையின் அடிப்படையில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2012 முதல் 2015 ஆம் வரையான காலப்பகுதியில் சபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 5,508,199 தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 659,375 தொகை என்பன மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| | 4.2(அ) | பதவியணியினரை ஆட்சேர்த்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கும்போது உரிய தகவல்கள் உள்ளடக்கப்படாமை மற்றும் காலரீதியில் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ஒரு விடயத்திற்காக பத்திரிகை அறிவித்தல் 02 முறை பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது முதலாவது பத்திரிகை அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 698,140 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. |
| | 4.3 | கருவா உற்பத்தியாளர்களை பயிற்றுவிக்கும் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 26,373,010 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையத்திலிருந்து ஏற்றுமதி அளவின் மேம்பாட்டிற்கு பங்களிப்பொன்று 2017 யூன் 28 ஆம் திகதி வரையிலும் கிடைக்காமையினால் இந்த நிலையத்திற்கு செலவிடப்பட்ட செலவினம் ஆக்கபூர்வமாக இருக்கவில்லை. |
| 2015 | 2.3(அ) | கிராமிய பொருளாதார புனர்வாழ்வளிப்பு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 5,000,000 தொகை கடன் தொகையில் ரூபா 2,891,748 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | 2.4(அ) | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 23(I) பிரிவிற்கு முரணாக நியமிக்கப்பட்ட சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,076,773 தொகையும், கடமை மற்றும் தனிப்பட்ட பயணங்களுக்காக வழங்கப்பட்ட வாகன வாடகையான ரூபா 6,270,670 தொகையும், வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கான படிகள் மற்றும் பிரயாணக் கட்டணங்களுக்காக ரூபா 2,122,770 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 12,470,213 தொகை முறையான அதிகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | 2.5(அ) | 1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 2(1) இன் பிரகாரம் சனாதிபதியின் தலைமைத்துவம், வணிக கப்பல் நடவடிக்கைகள், கைத்தொழில், விவசாய கைத்தொழில், மீன்பிடி, நிதி, வெளிவிவகாரம், திட்டமிடல் மற்றும் கிராமியக் கைத்தொழில் என்பவற்றுக்கான விடயப் பொறுப்பு அமைச்சரை உள்ளடக்கிய தேசிய அபிவிருத்தி சபையொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதிகாரச்சட்டத்தின் 13(1),(2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் இலக்குகளை அமுல்படுத்தும் போதும், நிறைவேற்றும் போதும், சபைக்கு செலவிட வேண்டி ஏற்படுகின்ற ஏதாவது செலவினமொன்றை தீர்ப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி நிதியமொன்று தாபிக்கப்பட வேண்டும்.<br><br>1992 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 23 வருட காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி நிகழச்சித்திட்டத்தையும் கொள்கைகளையும் அமுல்படுத்துவதற்கான தேசிய அபிவிருத்தி சபை கூடாதிருந்ததுடன் ஏற்றுமதி அபிவிருத்தி நிதியமும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 2.5(ஓ)(i) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக கடந்த 04 வருட காலத்தில் தொழில்சார் படியாக ரூபா 2,182,894 தொகையும், விசேட வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா 18,284,887 தொகை மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ரூபா 12,458,798 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| | 4.2(ஆ)(iv) | அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் ரூபா 5,040,000 தொகையொன்று எக்ஸ்போ இலங்கை தினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த போது சபையின் தலைவர் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் என்போர் அந்த தினத்திற்காக பங்குபற்றுவதற்கு ரூபா 1,079,688 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| | 4.2(ஆ)(vi) | எக்ஸ்போ கணக்காட்சிக்கு நியமிக்கப்பட்ட சபையின் உத்தியோகத்தர்களுக்கு 2015 மே 15 ஆந் திகதிய MF01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 04 (ட) பிரிவிற்கு முரணாக வெளிநாட்டுப் பிரயாணப் படியாக ரூபா 3,770,640 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | 4.2(ஈ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு, 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக அங்கீகாரமின்றி ஊழியர் கடன் நிதியமொன்று தாபிப்பதற்கும் அதற்கு மாதாந்தம் 7.2 சதவீத வட்டியை செலவு வைப்பதற்கும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசாங்கத்தின் மானியம் ரூபா 2,567,531 தொகை பயன்படுத்தப்பட்டுமிருந்தது. |
| | 4.6 | 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் கண்டறியப்பட்ட நட்டம் ரூபா 1,918,314 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எந்த செயல்நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 4.5(இ) | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரங்களுக்கும் நோக்கங்களுக்கும் முரணாக 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,520,848 செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | 2.5(அ)(ii) | 1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12(ட) பிரிவின் படி சபை 1988 முதல் தனியார் கம்பனிகளில் முதலீடு செய்திருந்த ரூபா 929,548,150 தொடர்பாக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| | 4.9 | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபைக்குச் சொந்தமான 5 வாகனங்களும், 4 உத்தியோகத்தர்களும் வரிசை அமைச்சில் சேவையில் ஈடுபடுத்தி 2014 ஆம் ஆண்டில் வாகனப் பராமரிப்புச் செலவினம், பதவியணியினர் சம்பளம் மற்றும் படி என ரூபா 2,824,256 தொகை சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| 2013 | 2.2.5(ஆ) | ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு வழங்க வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 1,009,740 அவ்வலுவலகத்தால் உறுதி செய்யப்படாதும் முறையான அங்கீகாரம் இல்லாதும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| | 4.2(ஊ) | இந்தியாவில், சென்னை நகரில் 2004 முதல் 2009 வரையான காலப்பகுதியின் போது சபை நடாத்திய இலங்கை வர்த்தக நிலையத்தின் 5 விற்பனைக் கூடங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவையும் மின் கட்டணமும் ஆகிய ரூபா 7,049,858 தொகையிலிருந்து ரூபா 3,084,693 தொகையொன்று 2018 ஆகஸ்ட் 15 திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | நிதி முதலீடு தொடர்பாக உரிய அங்கீகாரம் பெறப்படாமை மற்றும் பின்தொடர் நடவடிக்கையின்மை |
| | | (ii) | ஏற்றுமதிக் கம்பனிகளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடன் மற்றும் வட்டியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | விசேட செயற்திட்டக் கட்டுப்பாடு | | சபையினால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இலக்கிடப்பட்ட நோக்கங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சேவையில் சேர்ந்து 03 வருடங்களுக்குள் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை நடாத்தப்படாமை மற்றும் குறித்த பாடத்தொகுதிக்கு பதிலாக ஒரு பாடம் மாத்திரம் பரீட்சைக்கு உள்ளடக்கப்பட்டமை. |